**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW - 63 / PW - 39** |
| Name : அமிர்தலிங்கம் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O. (D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிகிறேன். 2019 ல் நான் செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக ( கிராம ஊராட்சி) பணிபுரிந்தேன். 18.04.2019 ஆம் தேதி மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் நான் பொன்பரப்பி காலனிக்கு சென்று தல ஆய்வு மேற்கொண்டேன். 41 வீடுகள் சேதமாகியிருந்தது. 2,89,000/- என்று சேதமதிப்பீடு செய்தேன். அந்த வீடுகள் புதுப்பிக்கப்பட்டன. அந்த மதிப்பீட்டின் நகலை காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு

கொடுத்தேன். அந்த மதிப்பீட்டு அறிக்கையின் ஜெராக்ஸ் நகல் **அ.த.சா.ஆ.2** ஆக குறியிடு செய்யப்படுகின்றது. **DSP** அது குறித்து என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். மாவட்ட ஆட்சியர் எனக்கு கொடுத்த உத்தரவை நான் காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் தல ஆய்வு செய்யும்போது என்னும் சிவில் இன்சினியர் ஜெயராமன் என்பவரும் ஆய்வுக்காக வந்தார். என்னுடைய அறிக்கையில் ஜெயராமன் ஆய்வுக்கு வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் ஜெயராமனையோ, வேறு இன்சினியர் யாரையுமோ ஆய்வுக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் தற்போது அழைத்து சென்றதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தேச மதிப்பை அதிகப்படுத்தி அ.தசா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் அவ்வாறு ஆய்வு மேற்கொள்வதற்கு எனக்கு போதிய கல்வி தகுதியும், அனுபவமும் இல்லை என்றாலும், எனவே, அ.த.சா.ஆ.2 ஆவணம் சரியானது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 64 / PW - 40**

Name : தேன்மொழி Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O. (D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம் செந்துறை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக பணிபுரிகிறேன். **2019** ல் நான் செந்துறை வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். அரியலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்து சில நபர்களின் சாதிச்சான்றிதழை கேட்டிருந்தார். நான் குணசீலன், ரவி, செல்வராஜ், செல்வகணபதி, அஜய், பிரகாஷ், பிரித்விராஜன், பிரபு, கௌதமி, அன்பழகன், வடிவேல், ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, மணிமேகலை, வெற்றிவேல் ஆகிய **14** நபர்களும் இந்து–பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள்

என்று சாதிச்சான்றிதழ் கொடுத்தேன். அதே மாதிரி முருகேசன், செல்வகுமார் என்கிற செல்வமுருகன், அருள்மணி, ராஜேஷ், அஜித், திருக்குமரன், ராஜா, சங்கர், பாண்டிராஜன், வினோத், பிரேம்குமார், விஜயகுமார், மதியழகன், வெற்றிவேல், ஆனந்தன் என்கிற முருகானந்தம், சரவணன், இளையராஜா என்கிற புலிக்குட்டி, குமார், பிரபு, கொளஞ்சிநாதன், பாலமுருகன், ராமு என்கிற ராமகிருஷ்ணன், பழனிமுத்து, வேலு, கார்த்திக், ஜீவா, சொக்கன் என்கிற தெய்வசிகாமணி, சக்திவேல், சங்கர் என்கிற குட்டி, வாசுதேவன் ஆகிய 33 நபர்களுக்கு இந்து–வன்னிய குல சத்திரியர் என்றும் சாதிச்சான்றிதழ்கள் கொடுத்தேன். அவ்வாறு நான் கொடுத்த அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இது குறித்து DSP என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 65 / PW - 41**

Name : குமரையா Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O. (D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக மேலாளராக (பொது) பணிபுரிகிறேன். 2019 ஆம் ஆண்டு நான் ஆண்டிமடம் வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். 26.08.2019 ஆம் தேதி அரியலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். இலையூர் கிராமத்தை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவருக்கு சாதிச்சான்றிதழ் வேண்டும் என்று கேட்டிருந்தார். மேற்படி கோவிந்தராஜ் இந்து–பறையர் வகுப்பை சேர்ந்தவர்

என்று நான் கொடுத்த அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. **DSP** அது குறித்து என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.</u>**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW - 60 / PW - 42** |
| Name : சதீஷ்குமார் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O. (D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குளத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். 2019 ஆம் ஆண்டு நான் மெக்கானிக்காக செந்துறை அன்னை மோட்டார்ஸ் என்ற TVS Showroom ல் வேலை பார்த்தேன். தற்போதும் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். DSP என்னை செந்துறை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதாக எனது கடை உரிமையாளர் சொன்னதால் நான் அங்கு போனேன். காவல் நிலையத்தில் இருந்த ஒரு TVS XL வண்டி, Star City வண்டி ஒன்று ஆகியவற்றை என்னிடம் காட்டி அதில் ஏற்பட்டிருந்த சேதங்களை சரிசெய்ய எவ்வளவு ஆகும் என்று கேட்டார்கள். நான் அந்த இரண்டு வண்டிகளையும் பார்த்துவிட்டு TVS XL

வண்டி **3,089** ஆகும் என்றும், **Star City** வாகனத்திற்கு **12,900/-** ஆகும் என்றும் சேத மதிப்பு சொன்னேன். இரண்டு வாகனத்திற்கும் தனித்தனியாக **Estimate** கேட்டார்கள், நான் கொடுத்தேன். அது தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. அது **அ.த.சா.ஆ.5 கோர்வையாக** குறியீடு செய்யப்படுகின்றது. அதில் வண்டி எண்கள் TN31 H 6731 TVS 50 மற்றும் TN 45 AK 6855 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அரியலூர் **DSP** அது குறித்து என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மெக்கானிக் தொடர்பாக எந்த படிப்பும் படிக்கவில்லை. நான் கொடுத்த அ.த.சா.ஆ.5 ல் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் அதில் எந்த கையெழுத்தும் போடவில்லை. அந்த மதிப்பு விவரங்களை ஓனர் தான் பார்த்துக்கொண்டார். எனவே, என்னுடைய கையெழுத்து இல்லை. ஆவணங்களை காட்டி அதில் ஓனரின் கையெழுத்தும் இல்லை என்று கேட்டபோது இல்லை என்று சாட்சி ஒப்புக்கொண்டார். வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதம் பற்றி அ.த.சா.ஆ.5 ல் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். இரண்டு வாகனங்களையும் நானோ, எனது ஓனரோ பார்வையிட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். நான் ஸ்பேர் பார்ட்ஸ் விற்பது கிடையாது என்றால் ஓனர் கடையில் உள்ளது. அ.த.சா.ஆ.5 ல் உள்ளது அந்த ஸ்பேர் பார்ட்ஸின் விலை என்றால் சரிதான். நான் செந்துறை காவல் நிலையத்திற்கு போனதாகவும், வாகனங்களை அங்கு பார்த்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எங்கள் கடையில் உதிரி பாகங்களுக்கு தனியாக பில் போடுவோம் என்றால் ஆமாம். நான்

சொல்வதுபோல் எந்த வாகனத்தையும் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW - 61 / PW - 43** |
| Name : ராஜா | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30** எதிரிகளுக்காக குவிமுச **317** மனு ஏற்பு. **3, 11, 28** எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O. (D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செந்துறையில் **ESU Motors** என்ற கடையில் மெக்கானிக்காக வேலை செய்கிறேன். **2019** ஆம் ஆண்டு நான் அதே **Showroom** ல் தான் வேலை பார்த்தேன். **18.04.2019** அன்று செந்துறை காவல் நிலையத்திற்கு ஒரு பல்சர் வாகனத்தின் சேதத்தை பார்ப்பதற்காக என்னை வரச்சொன்னார்கள். வண்டி நம்பர் சரியாக ஞாபகமில்லை. அந்த வண்டியை பார்த்துவிட்டு நான் ரிப்போர்ட் கொடுத்தேன். சேத மதிப்பு ரூபாய் **20,458/-** என்று நான் கொடுத்த அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். அது தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது.

அந்த சேத மதிப்பீடு அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இது குறித்து**DSP** என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கொடுத்த அ.த.சா.ஆ.6 ல் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6 ல் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை. நான் சொல்வதுபோல் எந்த வாகனத்தையும் பார்வையிடவில்லை என்றாலும் காவல் நிலையத்திற்கு அதற்காக போகவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கொடுத்த ஆவணத்தின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW - 62 / PW - 44** |
| Name : தமிழ்செல்வன் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30** எதிரிகளுக்காக குவிமுச **317** மனு ஏற்பு. **3, 11, 28** எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.**)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O. (D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முள்ளுக்குறிச்சியில் வசித்து வருகிறேன். செந்துறையில் தனலெட்சுமி **Motors** என்ற கடையில் மெக்கானிக்காக வேலை செய்கிறேன். **2019** ஆம் ஆண்டு நான் அதே கடையில் தான் வேலை பார்த்தேன். **18.04.2019** அன்று செந்துறை காவல் நிலையத்திற்கு வண்டி சேத மதிப்பிற்காக என்னை வரச்சொன்னார்கள். **Hero Passion Pro** வாகனத்தின் சேத மதிப்பு குறித்து அறிக்கை கொடுத்தேன். வண்டி எண் எனக்கு தற்போது ஞாபகமில்லை. அந்த வண்டியை பார்த்துவிட்டு நான் ரிப்போர்ட் கொடுத்தேன். சேத மதிப்பு மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ் மதிப்பு ரூபாய் **22,228/-** என்று நான் கொடுத்த அறிக்கையில் சொல்லியிருக்கிறேன்.

அது தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. அதில் தான் வண்டி நம்பர் உள்ளது. அந்த சேத மதிப்பீடு அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இது குறித்து **DSP** என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் அந்த வாகனத்தை 18.04.2019 அன்று போய் பார்த்தேன். நான் கொடுத்த அ.த.சா.ஆ.7 ல் என்னுடைய கையெழுத்தோ வேறு யாருடைய கையெழுத்துமோ இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.7 கம்பியூர்ட்டர் பிரிண்ட் அவுட் என்றால் சரிதான். நான் அந்த பிரிண்ட் அவுட்டை எந்த தேதியில் எடுத்து கொடுத்தேன் என்றால் அங்கு அப்போது வேலை செய்துகொண்டிருந்தவர்கள் எடுத்துகொடுத்தார்கள். யார் என்பதும் எந்த தேதி என்பதும் எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் 18.04.2019 அன்று நான் எந்த வாகனத்தையும் பார்வையிடவில்லை என்றாலும் காவல் நிலையத்திற்கு அதற்காக போகவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கொடுத்த ஆவணத்தின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 56 / PW - 45**

Name : கலைராஜ் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O. (D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் M.B.A., படித்திருக்கிறேன். சென்னையில் ஒரு நிறுவனத்தில் Sales Executive ஆக வேலை பார்க்கிறேன். 2019 ஆம் ஆண்டு பொன்பரப்பி காலனிக்கு நாடாளுமன்ற தேர்தலில் ஓட்டு போடுவதற்காக பைக்கில் வந்தேன். அப்பொழுது தேர்தலில் யார் யார் நின்றார்கள் என்றால் தொல்திருமாவளவன் என்பவரும் சந்திரகாசனும் நின்றார்கள். ஊருக்குள் சாதிக் கலவரம் நடந்ததாக என் அப்பா, அம்மா எனக்கு தகவல் சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான்

எப்போது, எதற்காக போட்டேன் என்றால் அன்றைய தேதியில் 03.00 மணிக்கு போட்டேன். போலீசார் என்னிடம் கலவரம் நடந்ததை பார்த்தீர்களா என்று கேட்டார்கள். நான் அப்போது தான் அங்கு வந்தேன் என்று சொன்னேன். அதற்காக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை DSP விசாரித்தாரா என்றால் விசாரித்த போலிஸ் யார் என்று எனக்கு தெரியாது. இரவு 09.00 மணிக்கு போலிசார் வந்து பார்த்து, என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் சம்பவ இடத்தை பார்த்து ஒரு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் வரைந்தார்களா என்றால் இல்லை. அப்படி எதுவும் நான் பார்க்கவில்லை. போலிஸ் விசாரணையில் நானும், இளஞ்செழியன் என்பரும் தான் போலிசாரிடம் நடந்த சம்பவங்களை சொன்னோம் என்றாலும், உடனிருந்தோம் என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பயந்துகொண்டு, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்டது உண்மைதான். ஆனால், அதிலுள்ள எதுவும் எனக்கு தெரியாது. வேறு எதுவும் நான் சொல்லவுமில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது.**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 58 / PW - 46**

Name : சந்தோஷ்குமார் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 20.11.2025

**(8, 12, 14, 16, 17, 19, 20, 22, 23, 25, 29, 30** எதிரிகளுக்காக குவிமுச **317** மனு ஏற்பு. **3, 11, 28** எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.**)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department 09.12.2024** தேதியிட்ட **G.O. (D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பொன்பரப்பி காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2019 ஆம் ஆண்டும் நான் பொன்பரப்பியில் தான் குடியிருந்தேன். பாராளுமன்ற தேர்தல் அப்பொழுது நடைபெற்றது. தேர்தலில் பானை சின்னத்தில் தொல் திருமாவளவனும், அவருக்கு எதிராக பாமக சார்பில் சந்திரசேகரனும் நின்றார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள். நான் அப்பொழுது தேர்தலில் ஓட்டு போட்டேன். தேர்தல் அன்று மதியம் 02.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். அப்போது ஒரே சத்தமாக கேட்டதால் நான் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தேன்.

அப்பொழுது இங்கு நிற்பவர்கள் எல்லோரும் அங்கு இருந்தார்கள். அவர்கள் கையில் இரும்பு கம்பி, இரும்பு கழி, கட்டை வைத்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பறத்தேவிடியா பயல்களே பானைக்கு ஓட்டு போட்டு விட்டு நீங்கள் இந்த வீட்டில் இருக்க முடியுமா என்று சொல்லிக்கொண்டு பெண்கள், ஆண்கள் என எல்லோரையும் அடித்தார்கள். நாங்கள் எல்லாரும் பயந்துகொண்டு ஓடிவிட்டோம். செல்வராஜ், செல்வகணபதி, மணிமேகலை, ரவி இன்றும் 4, 5 பேருக்கு அடிப்பட்டது. ஆஜர் எதிரி ராஜ்குமார், வேலு (அந்த நபரின் பெயரை கேட்கையில் அவர் வேல்முருகன் என்று சொன்னார்), சரவணன் (அந்த நபரின் பெயரை கேட்கையில் அவர் சிவானந்தம் என்று சொன்னார்), கொளஞ்சிநாதன், அருள்மணி ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். வீடுகளை அடித்து உடைத்திருந்தார்கள். அடிபட்டவர்கள் மருத்துவமனைக்கு போனார்கள். குணசீலன் என்பவர் கேஸ் கொடுத்தார். என்னையும் சத்தியமூர்த்தி என்பவரையும் விசாரித்தார்கள். நடந்ததை சொன்னோம். சம்பவத்தில் இருந்தவர்களை தெரியுமா என்று கேட்டார்கள். நான் நேரில் பார்த்தால் தெரியும் என்று சொன்னேன். அதிகாலை 02.00 மணியளவில் மருவத்தூர் மெயின்ரோடு அருகில் உள்ள முனியப்பா கோவிலில் வைத்து போலிசார் என்னையும், சத்தியமூர்த்தியையும் வைத்துக்கொண்டு விசாரித்தார்கள். அருள்மணியும், அஜித்தும் ஒரு Splendor வண்டியிலும், முருகேசனும், ராஜேசும் வேறு ஒரு Splendor வண்டியிலும் வந்தார்கள். போலீசாரை பார்த்தவுடன் அவர்கள் வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு போனார்கள். போலீசார் போய் அவர்கள் நான்கு பேரையும் பிடித்தார்கள். அவர்களை பிடித்து விசாரித்தார்கள். அருள்மணி போலீசாரிடம் ஒரு ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இரண்டு Splendor வண்டிகளையும் போலீசார் கைப்பற்றினார்கள். அதற்காக ஒரு மகசர் தயார் செய்தார்கள். அந்த மகசரிலும் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த வாகனங்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அதன் பிறகு அருள்மணி வீட்டிற்கு அழைத்து போனார்கள். அருள்மணி வீட்டிற்கு பின்புறத்திலிருந்து மூங்கில் கட்டை, மரச்சட்டம், பைப் இரண்டு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அதற்காக ஒரு மகசர் தயார் செய்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நானும் சத்தியமூர்த்தியும் கையெழுத்து செய்தோம். அதற்கான கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. சான்று பொருட்களை காட்டி கேட்டபோது சா.பொ.1 கழியையும், மரச்சட்டத்தையும் சாட்சி ஒப்புக்கொண்டார். எனவே, மரச்சட்டம் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இது குறித்து DSP என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

ஆஜர் எதிரிகளில் ஒரு சிலர் பெயர்களைத்தான் எனக்கு தெரியும். நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொன்ன பெயர்களைத் தவிர மற்ற பெயர்களை தெரியாதா என்றால் ஆமாம். நான், சத்தியமூர்த்தி ஆகியோர் எங்கிருந்து அன்று கிளம்பி சென்றோம் என்றால் பொன்பரப்பியிலிருந்து கிளம்பி சென்றோம். எத்தனை மணிக்கு கிளம்பி சென்றோம் என்றால் இரவு 11.00 மணிக்கு கிளம்பினோம். அதற்கு ½ மணி நேரத்திற்கு முன்பு

போலீசார் என்னிடமும் சத்தியமூர்த்தியிடமும் கிளம்பி போவது பற்றி தகவல் சொன்னார்கள். எனக்கு தகவல் சொன்னது யார் என்றால் அவர் பெயர் எனக்கு தெரியாது. அவர் செந்துறை போலீஸ் ஸ்டேசனை சார்ந்த போலீஸ்காரர். அதற்கு முன்பாக போனில் என்னிடம் யாராவது பேசினார்களா என்றால் அவ்வாறு யாரும் பேசவில்லை. சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்திலிருந்து பயந்து ஓடியதாக முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அதன் பிறகு வந்து அன்றே, போலீசாரிடம் கையெழுத்து போட்டுக்கொடுத்தேனா என்றால் ஆமாம். எத்தனை கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் மூன்று கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். நான் 1 ½ மணியளவில் ஓட்டு போட்டேன். நான் சென்னையில் வேலை பார்க்கிறேனா என்றால் ஆமாம். கோயம்பேடு மார்க்கெட்டில் கூலி வேலை பார்க்கிறேன். ஓட்டு போடுவதற்காக அன்று காலையில் தான் ஊருக்கு வந்தேன். நான் பஸ்ஸில்தான் சென்னையிலிருந்து ஊருக்கு வந்தேன். சிலர் சேர்ந்து வேன் எடுத்துக்கொண்டு ஓட்டு போடுவதற்காக வந்தார்கள். எல்லோரும் 1 ½ மணிக்குள் ஓட்டு போட்டு விட்டோம் என்றால் ஆமாம். அன்று காலையிலேயே ஓட்டு போடும் இடத்தில் பிரச்சனை ஆகி ஒரு அம்மா பானையில் தண்ணீர் கொண்டு வந்து எங்களுக்கு கொடுத்தபோது பிரச்சனை ஆகி அந்த பானை உடைந்துவிட்டது என்றால் ஆமாம். அந்த சம்பவம் நடந்தது எங்கு என்றால் பொன்பரப்பியில் ஓட்டு பதிவு நடந்துகொண்டிருந்த பள்ளிக்கூடத்து வாசலில் தான் அது நடந்தது. நான் எத்தனை வருடம் சென்னையில் வேலை பார்க்கிறேன் என்றால் 20 வருடங்களுக்கு மேலாக சென்னையில் தான் வேலை பார்க்கிறேன்.

குடும்பத்தோடு சென்னையில் தான் இருக்கிறேன் என்றாலும் பிள்ளைகளும் அங்கு தான் படிக்கிறார்கள் என்றாலும் சரிதான். ஆஜர் எதிரிகளில் யாராவது என்னுடன் படித்தவர்களா என்றால் நான் அந்த அளவுக்கு படிக்கவில்லை. நான் 7ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். அதன் பிறகு 8வது படிக்காமலேயே சென்னைக்கு போய்விட்டேன். எதிரிகளில் எனக்கு நெருக்கமாக தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. முதல் விசாரணையில் நான் சொன்ன எதிரிகளின் பெயர்கள் போலீசார் சொல்லி சொன்னேனா என்றால் ஆமாம். ஊர்க்காரர்களும் பெயர்களை சொன்னார்கள். பைக்கில் வந்தவர்களை போலீசார் பிடித்த போது எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் நான்கு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். நாங்கள் பொன்பரப்பியிலிருந்து வேனில் அந்த மருவத்தூர் முனியப்பா கோவிலுக்கு போனோம். அங்கு வந்த நான்கு போலீசாரின் பதவி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசாரை பார்த்தால் யார் **Inspector** யார் **Sub Inspector** என்று என்னால் கூறமுடியுமா என்றால் எனக்கு அந்த அளவுக்கு தெரியாது. அன்றைய தேதியில் ஓட்டு போடுவதற்கு என் மனைவியும், குழந்தைகளும் வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். நாங்கள் திரும்ப ஒரு மாதம் கழித்து தான் சென்னைக்கு போனோம். மனைவி பிள்ளைகளும் அதுவரை ஊரில் தான் இருந்தார்கள். தற்போது என் மகள் 12 ம் வகுப்பும், மகன் 9ம் வகுப்பும் படிக்கிறார்கள். இந்த பிரச்சனையில் எங்கள் தரப்பு மீதும் வழக்குபோட்டார்கள் என்றால் ஆமாம், 25, 30 பேர் மீது வழக்கு போட்டார்கள். எங்கள் தரப்பு பசங்கள் எல்லாம் வழக்கு போட்டதால் ஊரை விட்டு வெளியே போய்விட்டார்கள் என்றால் அப்படி எல்லோரும் போகவில்லை. என் மீது வழக்கு

இருக்கிறாதா என்றால் என் மீது எதுவும் இல்லை. நான் கையெழுத்து போட்டுகொடுத்த வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் ஒரு போலீஸ்காரர் தான் எழுதினார். அந்த வாக்குமூலம் எத்தனை பக்கம் எழுதினார் என்றால் 2, 3 பக்கம் எழுதியிருப்பார். நான் அதில் எத்தனை பக்கத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் எல்லா பக்கத்திலும் கையெழுத்து போட்டேன். அது நீலக்கலர் இங்க் பேனாவால் எழுதப்பட்டிருந்தது. கட்டை, கழி, பைப் ஆகியவை கைப்பற்றியது குறித்து எத்தனை பக்கம் எழுதினார்கள் என்றால் ஒரு 4, 5 பக்கம் எழுதினார்கள். அதிலும் நான் எல்லா பக்கத்திலும் கையெழுத்து போட்டேன். அதுவும் நீலகலர் இங்க் போனாவார் எழுதப்பட்டது. நானும் அதே நீலக்கலரால் தான் கையெழுத்து போட்டேன். எனக்கு DSP யார் என்று தெரியுமா என்றால் தெரியும், நான் பார்த்திருக்கிறேன். நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், எதிரிகளையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. என் முன்பு யாரையும் கைது செய்யவில்லை என்றாலும், பைக் கழி கட்டை ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி அருள்மணி எந்த வாக்குமூலமும் என் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அன்று கையெழுத்து போட்டது எல்லாம் எந்த இடத்தில் என்றால் கோவில் பக்கத்திலும், அருள்மணி வீட்டிலும் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். அருள்மணி வீட்டில் வைத்து கைப்பற்றுதல் மகசர் எழுதியது யார் என்றால் அதுவும் போலீசார் எழுதியது தான். அது எத்தனை பக்கம் என்றால் 2 பக்கம் இருக்கும், நீலகலர் இங்க் பேனாவால் தான் எழுதப்பட்டது, நானும் நீலகலர் பேனாவால் தான் கையெழுத்து போட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சாட்சி

சம்மனில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த சம்மன் **எ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த எ.த.சா.ஆ.1 கையெழுத்துக்கும் அ.த.சா.ஆ.8, 9, 10 ஆகியவற்றில் உள்ள என்னுடைய கையெழுத்தும் முற்றிலும் மாறியிருக்கிறது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னாவாறு அ.த.சா.ஆ.8, 9, 10 ஆவணங்கள் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், அந்த கையெழுத்துகள் என்னுடையது அல்ல என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் எல்லோரும் மதியம் 01.30 மணிக்கு முன்பே ஓட்டு போட்டுவிட்டு மற்றவர்களை ஓட்டு போடவிடக் கூடாது என்பதற்காக தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் பாலசுப்பிரமணயன் என்பவரை எல்லோரும் சேர்ந்து அடித்துவிட்டதாக நான் சொல்லவில்லை. நான் சொன்னது போல் எதிரி எந்த வாக்குமூலமும் தரவில்லை என்றாலும், எந்த பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், எதிரிகளையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.